யோகர் சுவாமிகள் பிரிவு 3

ஈழத்தில் அவதரித்த சித்தர்களில் யோகர் சுவாமிகள் மிக மிக முக்கியமானவர் சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரத்திலே சைவ வேளாண் குலத்தில் அம்பலவாணர் என்னும் பெரியாருக்கும், சின்னாச்சி அம்மையாருக்கும் ஆண்குழந்தை ஒன்று பிறந்தது .

. பெற்றோர் இக்குழந்தைக்கு யோகநாதன் என்று பெயர் சூட்டினர். அவரே பின்னாளில் யோகர் சுவாமிகள் என்று அன்போடு அழைக்கப்பட்டார். அக்காலத்தில் சைவப் பாடசாலைகள் மிக மிகக் குறைவு. அதனால் யோகநாதனின் கல்வி கத்தோலிக்கப் பாடசாலையிலேயே ஆரம்பமானது. இளமையில் துடுக்குடையவராயும், புத்தி ,யுக்தி உள்ளவராயும் வளர்ந்து வந்தார். ஒருநாள் யோகநாதன் சிவனொளிபாதம் சென்று சூரியன் உதிக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்ந்து வந்தார். இயற்கையின் சூழலிலே தமது மனதைப் பறிகொடுத்து விட்டார். அதனால் தன்பாட்டிலேயே பேசத் தொடங்கினார்.

தாயை எட்டு வயதில் இழந்தார். தந்தையை வாலிப வயதில் இழந்தார்.. ஆன்மீகத் தாகம் மேலிட்ட காலம். நல்லூர்த் தேரடியில் செல்லப்பா சுவாமிகளை சந்தித்தார். குருநாதனை சந்தித்த அனுபவத்தை அவரே கூறுகின்றார்."கருத்தில் நினைந்துருகி கைகூப்புந் தொண்டர் வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல்- திருத்தலத்தில் தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன் ஆரடா நீ "என்றான்

சுவாமிகளை நாடி நாள் தோறும் கூட்டம் கூடத் தொடங்கியது. செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் பெருங்கூட்டம் கூடி திருமுறைகள் பாராயணம் இடம்பெறும்.சுவாமிகள் தம்மை நாடி வந்தவர்களுடைய உள்ளப்பாங்கை அறிந்து அவர்களுக்கேற்ற வகையில் புத்திமதிகள் கூறுவார்கள்.

"எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஒரு இனம்" என்பது சுவாமிகள் தம்மை நாடி வருபவர் களுக்கு அடிக்கடி கூறும் உபதேசமாகும்.

சுவாமிகளுடைய உபதேசங்களை எலலோருக்கும் பரப்ப வேண்டும் என்று அடியார் கூட்டம் விரும்பியது. சுவாமிகளிடம் மாத வெளியீடு ஒன்று வெளியிடுவது பற்றி அடியார்கள் விண்ணப்பித்தார்கள். சுவாமிகளும் அதற்கிசைந்து நாம் எல்லோரும் சிவத் தொண்டர்கள். ஆகவே பத்திரிகைக்கு சிவத்தொண்டன் என பெயர் வைப்போம் என அருளினார் .

செல்லப்பா சுவாமிகள் யோகசுவாமிகளுக்குக் ஞானத்தைப் போதிக்கும் வகையில் அருளிய மாணிக்கமணியனைய வார்த்தைகளை யோகசுவாமிகளும் தன் பக்தர்களுக்கும் வலியுறுத்திக் கூறினார். மேலும் தன்னுடைய நற்சிந்தனையிலும் பரவலாக விரவி வைத்தார். யோகசுவாமியின் அடியார்களால் "மகாவாக்கியங்கள்" என்று கூறப்படும் அவை வருமாறு:

1. எப்பவோ முடிந்த காரியம். 2. நாம் அறியோம்

3. ஒரு பொல்லாப்பும் இல்லை 4. முழுதும்உண்மை

சுவாமிகளுடைய குருபூசை பங்குனி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.